செ.வெ.எண்: 952/2017 நாள்: 10.12.2017

**வேளாண்மைத்துறையில் ஒகிபுயலால் பயிர் சேதங்கள் குறித்த கணக்கெடுப்பு பணி 92% நிறைவடைந்துள்ளது என வேளாண் உற்பத்தி செயலர் திரு. ககன்தீப்சிங் பேடி இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலினால் கடுமையாக சூறைக்காற்றுடன் கூடிய கனமழை பெய்ததன் காரணமாக கடும் சேதங்கள் ஏற்பட்டது. வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலாளர் திரு. ககன்தீப்சிங் பேடி அவர்கள் பயிர் சேதம் அடைந்த பகுதிகளை பார்வையிட்டு சேதம் குறித்த கணக்கெடுப்பு பணியினை ஆய்வு செய்தார். குருந்தன்கோடு வட்டாரம் கல்படி ஏலா பகுதியில் புயலினால் பாதிப்படைந்த வாழை தோட்டங்களையும், காருபாறை கிராமத்தில் புயலினால் பாதிப்படைந்த தென்னந்தோப்புக்களையும் பார்வையிட்டார்.

நடப்பு பருவத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 4284 எக்டர் நெற்பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றுள் 299 எக்டர் பரப்பு நீர் தேங்கியதால் பாதிப்படைந்துள்ளது எனவும் 284 எக்டர் மற்றும் 2 எக்டர் உளுந்து பரப்பில் கணக்கெடுப்பு பணி இதுவரை நிறைவடைந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

தோவாளை வட்டாரத்தில் திருப்பதிசாரம் கிராமத்தில் நெல், இராஜாக்கமங்கலம் வட்டாரத்தில் தர்மபுரம், வடிவீஸ்வரம் கிராமங்களில் வாழை மற்றும் தென்னைமரங்கள் சேதமடைந்த பகுதிகளை பார்வையிட்டார்.

மேலும் 13150 தென்னை மரங்கள் புயலினால் அடியோடு சாய்ந்துள்ளது எனவும் 12105 தென்னை மரங்கள் குறித்த கணக்கெடுப்பு பணி நிறைவடைந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

மாவட்டம் முழுவதும் 144 வருவாய் கிராமங்களில் அகஸ்தீஸ்வரம் வட்டாரத்தில் 47.40 ஹெக்டேர் பரப்பில் 8250 தென்னை மரங்கள் சாய்ந்துள்ளது. தோவாளை 2.43 ஹெக்டேர், 426 தென்னை மரங்கள், கல்குளம் 20.38 ஹெக்டேர், 3566 மரங்கள், விளவங்கோடு 5.19 ஹெக்டேர், 908 தென்னை மரங்கள் சேதமடைந்துள்ளன. இதுவரை 92% கணக்கெடுப்பு பணி நிறைவடைந்து முடியும் தருவாயில் உள்ளது.

பயிர் பாதிப்பு குறித்த கணக்கெடுப்பு பணி முழுவீச்சில் நடைபெறுவதாக தெரிவித்த அவர் 11.12.2017-க்குள் கணக்கெடுப்பு பணிகள் முழுமையாக முடியுமென தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**